**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. DVC.2/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | விமல்ராஜ் | Prosecution | RW-2 chief and cross |
| Father Name | ராமகிருஷ்ணன் | Court | JM, Court, Sirkali. |
| Village | கண்ணாங்குளம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 42/2026 |

**Solemnly affirmed by Tmt.R.Geetha Grade-3 Bench Clerk, of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**

**21.05.2026**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.
எதிர் மனுதாரர் ஆஜரில்லை.

**முதல் விசாரணை**

என் பெயர் விமல்ராஜ் நான் கொள்ளிடம் வட்டார கல்வி அலுவலராக தற்போது பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் இன்று ஆஜராகி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கூழையார் நடுநிலைப்பள்ளியில் வேலை பார்க்கும் திருமதி.இலக்கியா க/பெ.தியாகராஜன் என்பவர் தொடர்பான ஆவணங்களோடு சாட்சியம் அளிக்க கோரப்பட்டு இருந்தது. அந்த வகையில் நான் உரிய ஆவணங்களோடு இன்று ஆஜராகியுள்ளேன்.

எங்கள் அலுவலக பதிவேடுகளில் பரிசீலித்த வகையில் மேற்படி நபர் கூழையார் நடுநிலைப்பள்ளியில் தற்காலிக இடைநிலை ஆசிரியையாக ஜீன் மாதம் 2025 முதல் ஏப்ரல் மாதம் 2026 வரை பணியாற்றினார் என்பது தெரிய வருகிறது. அவர் எங்களிடம் விண்ணபித்ததன் பேரில் தகுதியின் அடிப்படையில் தற்காலிகமாக அவரை பணிஅமர்த்தியிருந்தோம். மீண்டும் அவர் அவ்வாறு விண்ணப்பித்தால் அரசாங்க விதிகள் அனுமதித்தால் அவரை பணி அமர்த்த சாத்தியக்கூறுகள் உண்டு. மேற்படி பணிக்காலத்தில் அந்த நபர் மாதம் ரூ.12,000/- சம்பளம் வாங்கினார்.

**குறுக்கு விசாரணை**

இலக்கியா பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்ட நிலையில் புதிதாக அரசாங்கம் ஏதேனும் அரசாணை பிறப்பித்தால் தான் அவர் மீண்டும் பணியில் சேர வாய்ப்புண்டு என்றால் சரிதான். இலக்கியா தற்காலிக பணியாளர் என்பதால்

அவருக்கு இதர அரசு ஆசிரியர்கள் போல ஓய்வூதிய பலன்கள் ஏதும் கிடையாது என்றால் சரிதான். இலக்கியா எங்களிடம் வேலைக்கு விண்ணப்பித்த போது அவருடைய கல்வி சான்றிதழ்களின் நகல்களை மட்டும் வைத்துதான் விண்ணப்பித்து இருந்தார் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**